**O.S.No. 70/2016**

DW2 - செண்டு - க/பெ. கந்தையா தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2026

<u>குறுக்குவிசாரணை</u> (வாதி தரப்பில்)

1. நானும் கணபதி (1ம் வாதியும்) அருணாசலவடிவம்மாளின் பிள்ளைகள் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து எனது தந்தை குத்தாலிங்கதேவரின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எனது தந்தைக்கு இருந்தது என்றால் சரிதான்.

2. பிராது தபசில் சொத்து மொத்த விஸ்தீரனம் 23.47 செண்ட் என்றால் எனக்கு சரியாக தெரியாது. பிராது தபசில் சொத்துக்கள் மானாவாரி சொத்தாக இருந்தது என்றால் சரிதான். ஆதியில் எனது தந்தை காலத்தில் பிராது தபசில் சொத்து மழைக்காலத்தில் பயிரிடக்கூடிய மானாவாரி சொத்தாக இருந்தது என்றால் சரிதான். எனது தந்தைக்கு ஊரில் உள்ள குடியிருப்பு பகுதியில் வீடு இருந்தது என்றால் சரிதான். எனது கணவர் கந்தையாதேவர் எனது தாய் அருணாச்சலவடிவம்மாளின் மூத்த சகோதரன் சுப்பையாத்தேவரின் குமாரர் என்றால் சரிதான். சுப்பையா தேவருக்கும் ஊரில் உள்ள குடியிருப்பு பகுதியில் வீடு இருந்தது, அதில் அவரது சகோதரர்களுக்கும் பங்கு இருந்தது. வாதியும், எனது தாயாறும் சேர்ந்து பால் வியாபாரம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. (கட்டளை 18 விதி 12 சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளித்தார்)

3. நான் பிராது தபசில் சொத்தில் 3ம் தபசில் சொத்தில் தான் உரிமைகோருகிறேன் என்றால் சரிதான். அதை தவிர மீதமுல்ல

அணைத்து இடங்களிலும் எனது சகோதரருக்குத்தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் எந்த உரிமையும் கோரவில்லை.

4. 3ம் தபசில் சொத்தில் சகோரரான 1ம் வாதி ஓலை கூறையில் மாட்டு தொழுகையில் கரவைமாடுகள் வளர்த்து பால் வியாபாரம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரருக்கு எனது தந்தை 1ம் தபசில் சொத்தையும், வேறு சொத்துக்களையும் 25.09.1976ம் தேதியன்று பதிவுசெய்யப்பட்ட உயில் ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை 1997ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் வாதி பால் வியாபாரம் இலாபகரமாக இல்லாத காரணத்தினால் 1995ம் ஆண்டு முதல் கேரள மாநிலத்தில் உள்ள ஆரியங்காவு தென்மலை அஞ்சல், கொட்டாரக்கரை முதலான பகுதிகளுக்கு காய்கரிகள் தென்காசி பாவூர்சத்திரம் சந்தையில் இருந்து மொத்தமாக வாங்கி வியாபாரம் செய்துவந்தார் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. அதனால் பிராது 3ம் தபசில் சொத்தில் இருந்ததாக கூறும் மாட்டுத்தொழுகை மற்றும் ஓலை குடிசைகள் 1ம் வாதிக்கு தேவைப்படாமல் போய்விட்டது என்றும் இதனால் அவைகள் சிதலமடைந்த நிலையில் கிடந்தது என்றால் சரியல்ல. நான் 1ம் வாதியின் சகோதரி என்பதனால் எனது குடும்பத்துடன் வசித்துவந்த எனது கணவரின் வீடு பழுதுபட்டு இருந்ததால் அதனை சீரமைக்கும் காலங்களில் நான் பிராது 3ம் தபசில் சொத்தில் குடியிருக்க அனுமதி கோரினேன் என்றும் அதற்கு 1ம் வாதியும் எனது தாயாறும் அனுமதி கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. இதனால் 3ம் தபசில் சொத்தில் இருந்த ஓலைக்குடிசை கொண்ட வீடு சீரமைக்கப்பட்டு அதில் நான் குடும்பத்துடன் 1ம் வாதியின் அனுமதியுடன் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு கேரளா மாநிலத்தில் செய்துவந்த காய்கரி வியாபாரம் சரியில்லாத காரணத்தினால்

22.02.2005 ம் தேதியன்று வழக்கு சொத்துக்கள் இருக்கும் இடமான தேன்பொத்தை ஊறுக்கு திரும்ப வந்துவிட்டார் என்றும் எனது சகோரரர் ஊரில் இல்லாத சமயத்தை பயன்படுத்திக்கொண்டு பிராது 3ம் தபசில் சொத்தில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டிருந்த ஓலைக்குடிசை வீட்டை ஓட்டு கூறையாக மாற்றி அதில் நிறந்தரமாக குடியிருந்துவருகிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு இந்த விவரமானது அவர் ஊருக்கு திரும்பி வந்தபிரகுதான் அவருக்கு தெரியவந்தது என்றும் இதனால் நான் மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் குறித்து கண்டித்து கேட்டதாகவும் எனது செய்கை தவறு என்று ஒப்புக்கொண்டேன் என்றும் விட்டுக்கான கட்டுமான செலவுத்தொகையை 1ம் வாதி என்னிடம் கொடுத்தால் 9 மாத அவகாதத்திற்குள் நான் 3ம் தபசில் சொத்தை காலிசெய்த 1ம் வாதியிடம் ஒப்படைப்பேன் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல. 1ம்வாதி எனது வாக்கை நம்பி யாதொரு நடவடிக்கை எடுக்காமல் இருந்தார் என்றும் அதன் பின்னர் நான் காலிசெய்துகொடுக்காததால் ஒவ்வொரு முறையும் 1ம் வாதி கேட்டபோது நான் கால அவகாசம் கேட்டுவந்தேன் எனறு சொன்னால் சரியல்ல. பின்னர் இதனை நான் சாதகமாக எடுத்துக்கொண்டு நான் பிராதில் 3ம் தவசில் சொத்தை எனது மகனான 2ம் பிரதிவாதிக்கு 21.11.2014 ம் தேதியன்று மோசடியாக ஏற்பாடு ஆவணம் உற்பத்திசெய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

6. எனது வீட்டிற்கு தென்பக்கம் 1ம் வாதியின் மனைவி வீடு உள்ளது என்றால் சரிதான். நானும் 2ம் பிரதிவாதியும் தாக்கல் செய்துள்ள எதிருறையில் பிராது 3ம் தபசில் சொத்தில் உரிமை பற்றி கோரியுள்ள கோரிக்கைகள் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிராது 3ம் தபசில் சொத்து பிராது 1ம் தபசில் சொத்தில் ஒரு பாகமான 2ம் தபசில் சொத்தை தவிர மீதமுள்ள சொத்துக்களைபொருத்து 1ம் வாதி 2ம்வாதிக்கு

08.01.2015ம் தேதியில் ஒரு ஏற்பாட்டு ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பிராது 3ம் தபசில் சொத்தானது 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதனால் பிராது 3ம் தபசில் சொத்தில் உள்ள கட்டுமானங்களை இடித்து அப்புரப்படுத்தவும் அதன் சுவாதினத்தை 2ம் வாதிகளிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதியும் கோரியுள்ள எதிரிடை கோரிக்கை கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு உரிமைப்பெற்று அதன் பின்பு 2ம் வாதிக்கு உரிமைப்பெற்ற 3ம் தபசில் சொத்தை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கோடு நான் கட்சிசெய்துவருகிறேன் என்றால் சரியல்ல. பிராதுபடி தீப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எதிர்கோரிக்கை பரிகாரம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Thiru.K.N.Guru
District Munsif, Shenkottai

O.S.No. 70/2016

DW3 - பொண்ணம்மாள் - க/பெ. வெள்ளப்பாண்டி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2026

<u>குறுக்குவிசாரணை</u> (வாதி தரப்பில்)

1. எனது கணவர் வெள்ளப்பாண்டி பி.வா.ச. 2 ன் சகோதரர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு சகோதரர் முறை வேண்டும் என்றால் சரிதான். எனது மகளைத்தான் 2ம் பிரதிவாதி திருமணம்செய்துள்ளார் என்றால் சரிதான். குத்தாலிங்கத்தேவர் அவர்களுக்கு நடந்த விவரம் தெரியும். குத்தாலிங்கத்தேவருக்கு புஞ்சை, நஞ்சை மற்றும் வீடு இருந்தது என்றால் சரிதான். அனைத்தையும் தற்போது விற்றுவிட்டார்கள். எனது சொந்த ஊர் தேன்பொத்தையாகும். எனது ஊரில் உள்ள மந்திரமூர்த்தி குமாரர் சுடலையாண்டித்தேவர் இறந்துவிட்டார். பேச்சித்தேவர் மகன் முருகையா அவரும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். முருகையா பிள்ளைகள் யாரும் ஊரில் கிடையாது என்றால் சரிதான்.

2. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நானும் 1ம் பிரதிவாதியும் சொல்லிதான் எழுதப்பட்டது. பிராதில் 1 முதல் 4 தபசில் சொத்துக்கள் பற்றி சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. நான் எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 3 செண்ட் இடத்தை குத்தாலிங்கத்தேவர் குமாரர்கள் அனைவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு ஆவணத்தில் எழுதிக்கொடுத்தார்கள். ஆனால் மேற்படி ஆவணம் பதிவுசெய்யப்படவில்லை. மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. 3ம் தபசில் சொத்தின் கதவு எண் தெரியாது. நான் சொல்வது போல் குத்தாலிங்கத்தேவரும் அவரது குமாரர்களும் 1ம் பிரதிவாதிகளுக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 1ம் பிரதிவாதி 1ம் வாதிகொடுத்த அனுமதியின்பேரில்தான் பிராது 3ம் தபசில் சொத்தில் குடியிருந்துவருகிறார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் எனது சம்மந்தி மற்றும் மருமகன் என்பதால் அவர்கள் மீது மிகுந்த அக்கரை கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Thiru.K.N.Guru
District Munsif, Shenkottai